


ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் வடக்கு பகுதி, 160–வது வட்டம், ஆலந்தூரில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நிவாரண பொருட்களை வழங்கினார். அருகில் ஆலந்தூர் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் பி.குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ்,, வட்ட செயலாளர்கள் முரளிகிருஷ்ணன், கே.ஆர்.ஜெகதீஷ்வரன், மாநகர மன்ற உறுப்பினர் பிருந்தாஸ்ரீ முரளிகிருஷ்ணன் உள்ளிட்டோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், 74வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மிக்ஜாம் மற்றும் கனமழையினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (14.12.2023) நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மண்டலம் 4 ல் உள்ள 7 வார்டுகளில்

# 35 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - கே.ஆர்.பெரியகருப்பன் - பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

சென்னை, டிச. 15 -

மிக்ஜாம் புயல் காரணமாக, தொடர்ந்து பெய்த கனமழையினால் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தது. முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி. கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 4 பகுதிகளில் உள்ள வார்டு எண்.34, 35, 36, 37, 44, 45 மற்றும் 46 ஆகிய வார்டுகளிலும் “மிக்ஜாம்” புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை, தொடர்ந்து 5வது நாளாக நேற்றும் (14.12.2023) வழங்கி வருகிறார்கள்.

நேற்றைய தினம் (14.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம் 4ல் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி வார்டு எண்.45ல் மேயர் கிருஷ்ணமூர்த்தி நகர், விளையாட்டுத்திடல் மற்றும் வார்டு எண்.36ல் வாசுகிநகர் (பூங்கா பின்புறம்) விளை யாட்டு திடல் ஆகிய இடங்களில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

ஒரு நாளைக்கு ஒரு வார்டுகளில் 1000 குடும்பங்களுக்கு என மொத்த 7000 குடும்பங்களுக்கு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. 10.12.2023 அன்று நிவாரணப்பொருட்கள் வழங்கி பணி தொடங்கப்பட்டு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 5வது நாளாக இன்றும் நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது வரை ஒவ்வொரு வார்டுகளிலும் 5000 குடும்பங்கள் வீதம் 7 வார்டுகளில் 35,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, இதுவரை அரிசிமூட்டைகள்(5கிலோ பேக்) ரவை பாக்கெட்டுகள், ஆட்டா பாக்கெட்டுகள், சேலைகள், லுங்கிகள், போர்வைகள், வாட்டர் பாட்டில், நைட்டிகள், துண்டுகள், பிஸ்கட் பாக்கெட்டுகள் ஆகிய அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், உட்பட அந்தந்த பகுதி மாமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு

# தருமபுரி மாவட்டத்தில் அமைத்திடுவீர்!

## மக்களவையில் டாக்டர். டி.என்.வி.செந்தில்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச.15-

தருமபுரியில் ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) அமைக்க வேண்டும் என்று தருமபுரி எம்.பி. டாக்டர் டி.என்.வி செந்தில்குமார் நாடாளுமன்ற மக்களவையில் விதி 377-ன் கீழ் வேண்டுகோள் விடுத்தார்.

தருமபுரி நாடாளுமன்றத் தொகுதியில் 2010-ம் ஆண்டு ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் அமைக்க பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) எடுத்த முயற்சி குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டம் நெக்குந்தி கிராமத்தில் உள்ள நிலத்தை மாநில அரசும், மாவட்ட நிர்வாகமும் அடையாளம் கண்டு பரிந்துரை செய்யபட்டது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) அதிகாரிகளும் அந்த இடத்தை ஆய்வு செய்தனர். இருப்பினும், முன்மொழியப்பட்ட திட்டம் இன்னும் தொடங்கப் படவில்லை.

தர்மபுரி தொழில்துறையில் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, மாவட்டத்தை தொழில் வளம் மிக்க பகுதியாக மாற்ற உதவும். இந்த DRDO ஆராய்ச்சி மையம் 15,000 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் மற்றும் மேக் இன் இந்தியா முயற்சிக்கு உந்துதலாக செயல்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தருமபுரி மாவட்டத்தின் மேம்பாட்டிற்கான ஆராய்ச்சி மையத்தைத் தொடங்கவும், முன்மொழியப்பட்ட திட்டத்தை விரைவு படுத்துவதற்கான பணிகளை உடனடியாகத் தொடங்கவும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO)வுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சரகம் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அவர் வலியுறுத்தினார்.

### தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு! இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

# ஆர்.கே.நகரில் 4000 பேருக்கு நிவாரணப் பொருட்கள்!

## ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச.15

ஆர்.கே.நகரில் 4000 பேர்களுக்கு நிவாரண பொருட்களை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜெ. எபினேசர் வழங்கினார். மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் பங்கேற்றனர். இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட ஆர். கே.நகர் தொகுதி 42-அ வட்டத்தைச் சார்ந்த 4000 பேர்களுக்கு 5 கிலோ அரிசி, பெட்சீட், சேமியா, பால், பால் பவுடர், பிஸ்கட் ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிசேனர் வழங்கினார்.

மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்றனர்.

பகுதி கழக செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், என்.மருவ கணேஷ், இரா.பொன் இளவரசன், என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, எம். வேதலட்சுமி, கே.பி.சதிஷ் குமார், வெ.சத்திய நாராயணன், எஸ்.பி.எஸ்.புத்தன், வட்டக்கழகச் செயலாளர்கள் எஸ்.தமிழ்ச்செல்வன், தா.வ.மு. கஜேந்திரன், என். கோதண்டன், மா.நாகராஜ், ப.குமார், மாமன்ற உறுப்பினர் எம்.ரேணுகா காவிரி செல்வம், பி. கே.மூர்த்தி, எம்.எம்.சாமி ரூபாசங்கர், அன்பு சுரேஷ் பாபு, வி.முத்து, தனிகாச்சலம், திருப்பதி சாமி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.




ஆர்.கே.நகரில் மிக்ஜாம் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் 4000 பேர்களுக்கு நலத்திட்ட உதவிகளை ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினார். மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்றனர். பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா. லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நாட்டின் அதிகார மையத்தைக்கூட பாதுகாக்க முடியாதவர்கள்

# எப்படி நாட்டு மக்களுக்கு உரிய பாதுகாப்பைத் தருவார்கள்?

## ‘தினகரன்’ தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, டிச.15

பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களில் சிறு சம்பவங்கள் நடந்தால் கூட ‘சட்டம்-ஒழுங்கு’ சரியில்லை என மூச்சுமுட்ட கதறும் பா.ஜ.க.வினர் நாடாளுமன்றத்தில் அத்துமீறிய சம்பவம் விஷயத்தில் நாட்டின் அதிகார மையத்தைக் கூட பாதுகாக்க முடியாதவர்கள் எப்படி நாட்டு மக்களுக்கு உரிய பாதுகாப்பை தருவார்கள் என ‘தினகரன்’ நாளேடு 14.12.2023 தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



தினகரன்

டிசம்பர் 14, 2023 வியாழக்கிழமை

மீண்டும் பாதுகாப்பு குளறுபடி

அத்தலையங்கம் வருமாறு:-

கடந்த 2001, டிச. 13-ஆம் தேதி நாடாளுமன்ற வளாகத்திற்குள் ஒரு மர்ம கார் நுழைந்தது. அதிலிருந்து 5 தீவிரவாதிகள் இறங்கி திடீர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்திய பாதுகாப்பு படை வீரர்களும் பதிலுக்கு தாக்குதல் நடத்தினர். இருதரப்பு தாக்குதலில் 5 தீவிரவாதிகளும் சுட்டு கொல்லப்பட்டனர். 7 பாதுகாப்பு படை வீரர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். சம்பவம் நிகழ்ந்து 22 ஆண்டுகள் ஆனதை அனுசரிக்கும் அதே நாளில், மற்றொரு பாதுகாப்பு குறைபாடான சம்பவம் பா.ஜ.க. அரசில் மீண்டும் நிகழ்ந்துள்ளது. இம்முறை நடந்தது வெளியே அல்ல... நாடாளுமன்றத்தின் உள்ளேயே! நாடாளுமன்றத்தில் நேற்று குளிர்கால கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்தபோது பார்வையாளர் மாடத்திலிருந்து இருவர் நாடாளுமன்ற அரங்கிற்குள் குதித்து ‘சர்வாதிகாரம் ஒழிக’ என கோஷமிட்டபடி, மஞ்சள் நிற புகையை சபையெங்கும் உமிழ விட்டபடியே ஓடினர். சுதாரித்த எம்.பி.க்கள், இருவரையும் பிடித்து பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைத்தனர்.

நாட்டின் மிக முக்கிய அதிகார மையமான நாடாளுமன்றத்தின் உள்ளேயே அசம்பாவிதம் நிகழ்த்த 2 பேர் நுழைந்திருக்கின்றனர். அதுமட்டுமின்றி வளாகப் பகுதியிலும் 2 பெண்கள் நுழைந்து பாஜ அரசுக்கு எதிராக கோஷமிட்டுள்ளனர். இது மிக, மிக, மிக, மிக மோசமான பாதுகாப்பு குளறுபடி என்றுதான் சொல்ல வேண்டும். ஒருவேளை வந்தவர்கள் கண்ணீர் புகைக்கு பதிலாக விஷப்புகையை பரவ விட்டிருந்தால் எம்பிக்களின் நிலை என்ன? பொதுவாக, நாடாளுமன்ற பார்வையாளர்களாக வருவதற்கு சில விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

★ 4 கட்ட பாதுகாப்பு சோதனைகளை முடிந்த பின்னரே பார்வையாளர் உள்ளே அனுமதிக்கப்படுவார்.

★ மெட்டல் டிடெக்டர், ஸ்கேனர் மூலம் பார்வையாளர் முழுமையாக பரிசோதிக்கப்படுவார்.

★ அவரது அடையாளங்கள், ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்படும்.

★ ஒரு எம்.பி.யின் பரிந்துரை கடிதம் இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார். அந்த வகையில், உள்ளே நுழைந்தவர்களில் ஒருவரின் அனுமதி பரிந்துரையில் கர்நாடக மாநிலம், மைசூரு தொகுதி பா.ஜ.க. எம்பி பிரதாப் சிம்ஹா பெயர் இடம் பெற்றிருப்பது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. 2 பேரிடமும் உச்சக்கட்ட பாதுகாப்பு சோதனை நடத்தப்பட்டதா? மெட்டல் டிடெக்டர், ஸ்கேனர் மூலம் பரிசோதிக்கப்பட்டனரா? எந்தவித ஆவணங்களுமின்றி இருவரும் அனுமதிக்கப்பட்டது எப்படி? இப்படி எண்ணற்ற கேள்விகள் ஒவ்வொரு இந்திய குடிமகனிடம் எழுந்துள்ளது.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், இச்சம்பவத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாதுகாப்பு குளறுபடியே காரணமென குற்றம் சாட்டியுள்ளனர். பா.ஜ.க. ஆட்சி செய்யாத தமிழகம் உள்பட பல மாநிலங்களில், சிறு சம்பவங்கள் நடந்தாலும் ‘சட்டம், ஒழுங்கு சரியில்லை’ என பா.ஜ.க. தேசிய தலைவர்கள் முதல் லோக்கல் தலைவர்கள் வரை மூச்சு முட்ட கதறுவார்கள். இந்த சம்பவத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? மார்கழியை வரவேற்க மஞ்சள் பொடி வீச்சு என்றா? நாட்டின் அதிகார மையத்தை கூட பாதுகாக்க முடியா தவர்கள், எப்படி நாட்டு மக்களுக்கு உரிய பாதுகாப்பை தரப்போகின்றனர் என்ற கேள்வி, ஜனநாயகத்தை நேசிக்கும் குடிமகன்கள் மனதில் ஓங்கி ஒலிக்கிறது!

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு சண்முகா திருமண மண்டபத்தில் வெள்ள நிவாரண பொருட்களை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், ம.இராஜி, மாநகர நகர பகுதி செயலாளர்கள் தி.வை.இரவி, சன்.பிரகாஷ், ஜி.நாராயண பிரசாத், நகராட்சி ஆணையர் சுரேந்தர்ஷா, நகராட்சி பொறியாளர் ருத்ரகோட்டி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுகுத்தகை கே.சுரேஷ் குமார், நகர் மன்ற உறுப்பினர்கள் நிர்வாகிகள் எஸ்.கமலக்கண்ணன், சாந்திபாபு, ஸ்ரீதேவி, பி.எல்.ஆர்.யோகா, தங்கராஜ், ஜெயக்குமார், மேகநாதன் , பிரகாஷ், மகேஷ்குமார், மாதவன், ஆர்.ஸ்டீவ்வாக், உள்பட உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி ஒன்றியம் நசரத்பேட்டை யமுனா நகர் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி நிவாரண பொருட்களை வழங்கி அதனுடன் நடைபெற்ற மருத்துவ முகாமை பார்வையிட்டார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், வட்டாட்சியர் மாலினி, நிர்வாகிகள் வி.குமார், ஏ.ஜனார்த்தனன், புகழேந்தி, பிரகாஷ், மாவட்ட கவுன்சிலர் ஏஜி. ரவி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் டி.குமரேசன், திருமலை ராஜ் திருலோக சுந்தர், கேசவன், சாய்மோகன், ஊராட்சி மன்ற தலைவர் திவ்யா பொன்முருகன், கவுன்சிலர் உமா மகேஸ்வரி சங்கர் வார்டு உறுப்பினர் சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்.